றப்பட்டு இருக்கின்றன. அப்படி ஏதாவது குறிப்பிட்ட இடத்திலே இருக்கும் என்று சொன்னால், உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. த. ரத்தினவேல்.

திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் திருச்சி மாநகரத்தில் காந்தி மார்க்கெட் பகுதியிலும் மத்திய பேருந்து நிலையம் அருகிலும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் இந்த ஆண்டு இந்தத் திட்டம் துவக்கப்படவில்லை என்று சொன்னாலும், அடுத்த ஆண்டிலாவது அரசு நிறைவேற்றித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருச்சி மாநகரைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கின்ற இந்தத் திட்டங்கள் அவசியம் என்று சொல்லி, நிதி நிலையின் அடிப்படையிலே இந்தத் பணிகள் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்து இருந்தேன். இன்றைக்கு உள்ளாட்சி நிறுவனங்களுக்கு இருக்கின்ற பிரதானப் பிரச்சினையே, நிதி நிலைமை தான். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு உள்ளாட்சி நிறுவனங்கள் தங்களுடையநிதி நிலையைப் பெருக்குவதற்கு எவ்வளவோ நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே வருகின்ற நிதி ஆண்டில் இது பற்றி ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 499, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

499—

வேலூரில் பேருந்து நிலையத்தைப் பழுதுபார்த்தல்

*20583—திரு. சி. ஞானசேகரன் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகரில் பேருந்து நிலையம் பழுதுபார்க்கப்படாமல் உள்ளதால், மூன்று இடங்களில் பேருந்துகள் வெளியில் நிறுத்தப்பட்டு பொதுமக்கள் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1994 மே 3]

விடை—

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி</u> உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வேலூர் நகராட்சி பேருந்து நிலையங்களில் பழுதுகள் நீக்கப்பட்டு அனைத்து பேருந்துகளும் சாலை ஓரங்களில் நிறுத்தப்படாமல் பொது மக்களுக்கு வசதியாக பேருந்து நிலையங்களில் நிறுத்தப்பட்டு வருகின்றன.

<u>திரு. சி. ஞானசேகரன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வி கேட்டு நெடு நாட்களாகிவிட்டன. அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. வேலூரில் பேருந்துகள் மூன்று இடங்களிலே—அண்ணா கலையரங்கம், அதே போல நேஷனல் தியேட்டர் பக்கத்திலும் பேருந்துகள் நிறுத்தப்பட்டன— அவை எல்லாம் இப்போது ஒரு பஸ் ஸ்டாண்டுக்கு வந்துவிட்டன. இருந்தாலும் கூட, இப்போது பஸ்களை நிறுத்த முடியாமல் இடம் போதாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பை பாஸ் ரோடு ஓரம் ஒரு பத்து ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, வேலூரில் பேருந்து நிலையத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு இருக்கின்ற கேள்விக்கு உண்டான பதிலை அவர்களே தெரிவித்து விட்டார்கள். புதிதாக பஸ் நிலையம் கட்டப்படுவது தொடர்பாக என்னிடத்திலே குறிப்பு இல்லை. இருந்தாலும் உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கின்ற தகவலின் அடிப்படையில் இது பற்றி அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. சி. ஞானசேகரன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரில் இருக்கக்கூடிய பேருந்து நிலையத்தில் இப்போது புதிதாக வந்து இருக்கின்ற ஆணையாளர் பல கடைகளை வைக்க அனுமதித்து விட்டு இருக்கிற காரணத்தினாலே, பயணிகள் அந்த இடத்திலே நிற்க முடியவில்லை. ஆகவே கடைகளை எல்லாம் அப்புறப்படுத்தி— அதாவது 15 நாட்களுக்கு முன்புதான் அந்தக் கடைகளை விட்டுவிட்டு இருக்கிறார்கள், அந்தப் பேருந்து நிலையத்தில் இருக்கிற கடைகளை, சிறு சிறு கடைகளை எல்லாம் அப்புறப்படுத்தி பயணிகள் இந்த வெய்யில் காலத்தில் நிற்கக்கூட முடியவில்லை, எனவே— மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சிறு சிறு கடைகளை எல்லாம் ஏற்கெனவே பழையபடி இருந்தது போலவே, கடைகளே இல்லாமல், பேருந்துகளும் அதுபோல அங்கே இருக்கக்கூடிய பயணிகளின் வசதிக்காக இந்தச் சிறு சிறு கடைகளை அப்புறப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1994 மே 3

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேலூர் நகராட்சியைப் பொறுத்தவரை அந்தப் பேருந்து நிலையத்திலே பல்வேறு பிரச்சினைகள் இருப்பது உண்மைதான். ஆனால், இன்றைக்கு பொறுப்பேற்று இருக்கின்ற நகராட்சியினுடைய ஆணையாளர் தமிழகத்திலேயே ஒரு தலைசிறந்த ஆணையாளர் தேர்ந்தெடுக்கப்பட்டுத்தான் வேலூர் நகராட்சியிலே பல்வேறு பணிகள் நடைபெற வேண்டும் என்ற காரணத்தினாலேதான் இன்றைக்கு அவர் அங்கு பணியமர்த்தப் பட்டு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையின் பேரிலே பல்வேறு நடவடிக்கைகள் வேலூர் நகராட்சியிலே மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை மனச்சாட்சியோடு ஒத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு ஏற்கெனவே அந்த பேருந்து நிலையத்திலே ஆக்கிரமிப்புகள் உள்ளன என்று சொல்கின்ற அந்த இடங்களும், இன்றைக்கு விடப்பட்டு இருக்கின்ற கடைகள் என்று சொல்கின்ற அந்த நிலையம் தொன்றுதொட்டு பழங்காலத்திலிருந்தே இருந்து வந்து இருக்கிற நிலைமை. . . . இதை எல்லாம் இன்றைக்கு அந்த பேருந்து நிலையத்திலும் சரி, நகரத்திலுள்ள மற்ற பல்வேறு பகுதிகளிலும் சரி தற்போது பொறுப்பேற்று இருக்கின்ற ஆணையாளர் சரி செய்து நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற பிரதான பிரச்சினை, பேருந்து நிலையத்திலே போக்குவரத்து நெருக்கடி என்று சொன்னால், பெருகி வருகின்ற தேவையைக் கருதி மாற்று ஏற்பாட்டைத்தான் அரசு ஆலோசிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தா. வேடியப்பன் (குறுக்கீடு) இல்லை, அவர் அதைச் சொல்லவில்லை திரு. ஞானசேகரன் அந்த மாதிரி என்றால் தனியாகக் கேட்க வேண்டும்

முற்பகல் 11-15

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் பஸ் ஸ்டாண்டு பொறுத்தவரையில் வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் வேலூர் மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்தில் பேசிய போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அந்த இடம் தேவையில்லை என்றும், மாற்று வழியாக பஸ் ஸ்டான்டில் இருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையின் கீழ் இயங்கக்கூடிய காவல் துறையின் குவார்ட்டர்ஸ் பழைய கட்டடமாக இருக்கிறது என்றும், அதை வேண்டுமானால் வேறு இடத்திற்கு மாற்றி விட்டு, அந்த இடத்தையும் எடுத்துக் கொண்டு, உள்ளாட்சித் துறை மூலமாக நகராட்சியின் சார்பாக அந்த பஸ் ஸ்டாண்டை விரிவு செய்யலாம் என்றும் தெரிவித்து இருக்கிறார்கள்.

அதைப் போல அந்த பஸ் ஸ்டாண்டை விரிவுபடுத்தினாலே போதும். ஏனென்றால் பெரிய அளவில் அதிகமான பண முதலீட்டில் அந்த பஸ் ஸ்டாண்டு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. எனவே, டேமேஜாகி இருக்கிற காவல் துறை குடியிருப்பை வேறு இடத்திற்கு மாற்றம் செய்து, அந்த இடத்தையும் சேர்த்து பஸ் ஸ்டாண்டை விரிவுபடுத்த நம்முடைய உள்ளாட்சித் துறை மூலமாக மாற்று வழி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்து பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 500, திரு. என். ஆர். ராஜேந்திரன் இருக்கையில் இல்லை.

485—

திருமலைக்கவுண்டன்பாளையம், பேரநாயக்கன்புதூர் கிராமங்களுக்குப் பேருந்து வசதி ஏற்படுத்துதல்

*21519—டாக்டர் மு. சீனியம்மாள் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமலைக்கவுண்டன்பாளையம், பேரநாயக்கன்புதூர் ஆகிய கிராமங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்த அரசு முயலுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) திருமலைக்கவுண்டன்பாளையம், பேரநாயக்கன்புதூர் கிராமங்களுக்கு போதிய பேருந்து வசதி செய்யப்பட்டு இருக்கிறது.

(ஆ) இக்கேள்வி எழாது.